# இலக்கியங்களில் சமூகப் பண்பாட்டுக் கூறுகள்

முனைவர் வெ.சிவசங்கர், பேராசிரியர் & துறைத்தலைவர், தமிழ்த்துறை,
வேல்ஸ் பல்கலைக்கழகம், பல்லாவரம், சென்னை. கைபேசி: +91 90474 73013

இலக்கியம் வாழ்க்கையை உருவாக்குகிறது. வாழ்க்கையில் இருந்து இலக்கியம் உருவாகிறது.சமுதாயத்தின் வாழ்க்கையை காட்டும் கண்ணாடி போன்றது இலக்கியம் . சமூகத்தைப் பிரதிபலிக்கும் காலச் சுவடு மனித இன வரலாற்றை அறிந்து கொள்வதற்கும், அவர்களின்பண்பாடு நம்பிக்கைகள் குறித்து தெரிந்து கொள்ள கலையும் இலக்கியமும் துணை நிற்கின்றன. இவற்றுள் இலக்கியம் அது தோன்றிய காலத்தின் பண்புகளை பண்பாட்டை தெளிவாகக் கண் முன் காட்டுகின்றது.

மனிதனுடைய வாழ்நிலைகளில் சாரமாகக் காணப்படுகின்ற ஒழுகலாறுகள், நடத்தைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள் ஆகியவற்றை பற்றிய உணர்வு நிலைகள் பண்பாடாகும். மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்துவது பண்பாடே. “பண்பாடு என்பது ஒரு முறையான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி” எனக் கருத்தியலாளர்கள் பொதுவகையில் விளக்கம் தருகின்றனர்.

## தொல்காப்பியம்

பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியம் பழந்தமிழரின் பண்புகளை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. பொருளதிகாரத்தில் தமிழர் தம் வாழ்க்கை, ஒழுக்கம், பண்பாடு, குணநலன்கள் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளது. களவியல் வழியே தலைவன், தலைவி, தோழி போன்றோரின் ஒழுக்க முறைமைகளை அறிய முடிகின்றது. முதற்கண் தலைவி தன் தோழிக்கு தன் களவொழுக்கத்தை உணர்த்துவாள். பின் தோழி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் உணர்த்துவாள். தந்தையும் தமையன்களும் குறிப்பால் உணர்வர். இதனை “அறத்தொடு நிற்றல்” என வரையறுத்தனர். இது அவர்களது மிகச் சிறந்த பண்பாட்டை உணர்த்தி நிற்கிறது.

புறத்திணையிலும் போர் புரியும் முறைமையில் குறிப்பிட்ட அறநெறியைக் கடைபிடித்தமையை வெளிப்

படுத்தியுள்ளார் தொல்காப்பியர். தமிழர்களுக்கென தனிப்பட்ட பண்பாடும் பழக்கவழக்கங்களும் ஒழுக்கநெறியும் இருந்தமையும்,அகம்,புறம் என்ற இரு நெறிகள் சார்ந்து சமுதாய மதிப்புகள் வெளிப்பட்டமையும் தொல்காப்பியத்தின் வழி அறியமுடிகிறது எனலாம்.

தமிழின் பழம்பெரும் இலக்கியங்களாகக் கருதப்படும் சங்க இலக்கியங்களில் பண்பாடு என்னும் சொல்லுக்கு நேர் பொருள் பிற மனிதர்களின் துயரங்ளை உணர்ந்து அத்துயரங்களையும் பண்பாட்டு நோக்கோடு அணுகுவோரை பண்புடையவர் என்றனர்.

**பாடு அறிந்து ஒழுகும் பண்பினாரே**
**– புறம். 197:14**

என்னும் புறநானூற்றுப் பாடலடியில் பிறர் துயரம் கண்டு அதற்கு இரங்குவோரே பண்பாடு உடையவர் என்றது.

**ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**
என்று கலித்தொகையிலும் மனிதர்கள் கடைபிடிக்கவேண்டிய நற்பண்புகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.

மன்னர்களும் பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர். உலகத்தில் அரிதாகக் கிடைக்கக் கூடிய இறைவனே வந்து கொடுத்த சிறப்பு பொருந்திய உணவாக இருந்தாலும் அதனைத் தான் மட்டும் உண்ணாமல் உலகில் உள்ள அனைவருக்கும் கொடுத்து உண்ணுவேன் என்று கூறிய அறக் கொள்கையைக் கடலுண்மாய்ந்த இளம்பெருவழூதி,

**உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிது** எனத்
**தமியர் உண்டலும் இலரே – புறம்.182–1–3**

என்ற பாடல் அடிகளின் மூலம் அமிழ்தமாக இருந்தாலும் அனைவருக்கும் பகிர்ந்தளிப்பேன் என்று அரசநிலையில்கூட பொதுமை உள்ளதை சங்ககாலச் சமூகம் பெற்றிருந்தது என்பதை அறியலாம்

**நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையர் கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே**

என்ற ஔவையார் பாடிய பாடல் நிலத்திற்கு என்று தனி யியல்பு ஒன்று இல்லை, எங்கு நல்லவர் வாழ்கின்றாரோ அங்கு நிலமும் வளமாகவே அமையும். அறிவு, ஆற்றல், ஆளுமை, உழைக்கும் பண்பு அனைத்தும் பெற்றவர்களையே பண்டைக்காலத்தில் நல்லவர் என்றனர். ஆதலால், மனிதர்கள் முறையாகப் பயன்படும் இடங்களில் எல்லாம் பொருள்வளம் இருக்கும்; பொருள் வளம் செழித்த நிலையில் சமுதாய மேம்பாடு விளங்கும்.

வீட்டில் பொருளாதார மேலாண்மை குடும்பத் தலைவியிடம் இருந்தது என்பதை சங்கப் பாடல்கள் கூறுகின்றன. வறுமையில் வாடிய பெருஞ்சித்திரனார் பரிசில் பெற்றுவந்தார். வந்தபின் தமது மனைவியிடம் சொல்லுகின்றார், 'வாழ்க்கைத் துணைநலமே! இதோ, குமணன் தந்த பரிசுப் பொருள்

கள்! உனக்கு வேண்டியவர்களுக்குக் கொடு உன்னால் விரும்பப்படுகிறவர் களுக்கும் கொடு உனது சுற்றத்தாருக்கும் கொடு நமது சுற்றத்தாருக்கும் கொடு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பாராட்டாது அனைவருக்கும் கொடு என்னைக் கேட்காம லும் கொடு கலந்து ஆலோசனை செய்யாமலும் கொடு! உன் விருப்பம் போலக் கொடு!" என்கிறார்.

ஆதலால், குடும்பத் தலைவிக்குக் குடும்பத்தில் பொருளாட்சி இருந்தது தெரிய வருகிறது. சங்க இலக் கியங்கள் மனைவியைக் குடும்பத் தலைவி என்றே கூறு கின்றன. திருக்குறள் "வாழ்க்கைத் துணைநலம்" என்று சிறப்பிக்கிறது. சங்க காலத்தில் சமூக அமைப்பு இருந்தது. எல்லாக் குடும்பங் களிலும் மகிழ்ச்சி நிலவ வேண்டும் என்பதே தமிழ் நெறியின் குறிக்கோள்.

"எல்லாரும் எல்லாப் பெருஞ் சங்ககாலத்தில் கணியன் பூங்குன் றன் என்ற கவிஞன். "யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடினான்! உலகம் நெருங்கிவந்தால் மட்டும் போதாது உலக மாந்தர் ஒரு குலமாக வேண்டும். இதுவே கணியன் பூங்குன்றனின் இலட் சியம் இந்தக் கருத்தையே வள்ளலார், ஆன்மநேய ஒருமைப்பாடு என்றார்.

மக்களை ஒழுங்குடன் –ஒழுக்க முடன் வாழச் செய்ய வேண்டியது அரசின் கடமை. மக்களிடத்தில் ஒழுக்கக் கேடுகள் இருந்தால் அதற்குரிய பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்.

**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே.**

என்று பாடினார் பொன்முடியார். இந்த உலகம் இன்னுமும் இனிமையாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணமாக சமுதாய மதிப்பு மாறாமல் இருக்க இலக்கியங்கள் துணை நிற்கின்றன.

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்**

என்ற பாடல் வரிகள் போன்று உலகு தழுவிய வாழ்வியல் விழுமியங்களை இன்னும் இலக்கியங்களில் காணமுடி கிறது

சங்க காலத்தின் உதயம் தொட்டு வளர்ந்து வந்த சிகரங்கள் பிற இலக்கி யங்கள் "சேரன் தம்பி சிலம்பை இசைத்தது, தெய்வ வள்ளுவன் வான்மறை செய்தது, கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்தது" இம்மூன்று நிகழ்ச்சிகளும் நம் தமிழகத்தின் தேசியப் பெருநிகழ்ச்சிகள் என்பது மகாகவி பாரதியின் கருத்து இம்மூன்று கவிஞர்களையும் தமிழ்ப் பண்பாட்டின் இமயங்களைாகக் கூற இடமளிக்கிறது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அன்புணர்வோடு வாழ்ந்த சங்கத் தமிழர்களின் வாழ்வில் சிறந்த பண்பாடு களே நிலை கொண்டன. இயற்கை யோடு இடைந்த வாழ்வில் அறம், விருந்தோம்பல், ஒழுக்கநெறி, கல்வி, அரசியல் தெளிவு, வீரத்தின் சிறப்பு போன்ற பண்பாட்டுக் கூறுகளை உணர்த்துகின்றது. பண்பாட்டுப் பெட்ட கமாகத் திகழ்ந்த சங்க இலக்கியங்கள் நம் இதயங்களைத் தொட்டு உறவாடி உரையாடும் என்பதனை தெளிவாக உணர முடிகின்றது. சமூகவியல் ஆய்வு என்பது அறிவியல் சார்ந்த உட்கூறு களைக் கொண்டதாக விளங்குவதால் அதன் வழி நின்று இலக்கியங்களை பார்க்கும் போது சமுதாயத விழுமிங் களை அறிந்து கொள்ளமுடிகிறது.

– **தொடரும்**